# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.184/2023

## அ.சா.9 (LW 15 )

| பெயர் | மகாராஜன் | தொழில் | |
|---|---|---|---|
| த/க பெயர் | திருமலை | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 18.09.2025 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 எதிரி ஆஜர். 2 ம் எதிரி இறப்பு

__முதல் விசாரணை__

நான் தற்போது திண்டுக்கல் நகர் வடக்கு காவல்நிலையத்தில் சிறப்பு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.06.2023 அன்று 14.30 மணிக்கு திண்டுக்கல் நகர் காவல்நிலைய குற்ற எண். 224/2023 இதச பிரிவு 302 வழக்கில் கொலையுண்டு இறந்து போன அழகுபாண்டி என்பவரது பிரேதத்தை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் உள்ள பிரேதகிடங்கில் வைத்து உடற்கூராய்வு மருத்துவரிடம் ஆய்வாளர் கொடுத்து அனுப்பிய வேண்டுகோள் கடிதத்தை கொடுத்து அங்க மச்ச அடையாளம் காண்பித்து பிரேதத்தை அடையாளம் காட்டினேன்.அந்த வேண்டுகோள் கடிதம் இதுதான். **அது அ.த.சா.ஆ.5. ஆகும்.** பிரேத பரிசோதனை முடிந்த பிறகு உடல் உள்ளுறுப்புக்களை சேகரிப்பதற்கு மருத்துவருக்கு உதவியாக இருந்தேன். அந்த பிரேதத்தின் மீதிருந்த உடைகளான 1. ஸ்கை புளு கலர் சட்டை, 2. புளு கலர் ஜட்டி, 3. கருப்பு கலர் பேண்ட் ஆகியவற்றை மருத்துவர் என்னிடம் கொடுத்தார். அதை நான் பெற்றேன். பிரேதத்தையும் ஒப்படைத்தார். பிரேதத்தை அவரது உறவினர் வசம் ஒப்படைத்தேன். மேற்படி ஆடைகளை நிலையம் வந்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

கடந்த 21.06.2023 அன்று திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று மருத்துவரிடம் விசரா தபாலை பெற்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் மேற்படி பிரேதத்தின் உடல் உள்ளுறுப்புகள் இருந்த பெட்டியை ஒப்படைத்தேன்.

22.06.2023 அன்று திண்டுக்கல் நீதித்துறை நடுவர் எண்.1. நீதிமன்றத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஆடைகள் இருந்த மரப்பெட்டியை மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். அந்த கடிதம் இதுதான். நீதிம்ன்றத்தில் கொடுத்த கடிதம் இதுதான். அது அ.த.சா.ஆ.6 ஆகும். ஆய்வார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில் அரசு மருததுவரிடம் பிரேதத்தின் அங்க மச்ச அடையாளங்களை காட்டவில்லை என்றாலும் பிரேத பரிசோதனையின் போது நான் உடன் இருக்கவில்லை என்றாலும் சரியல்ல. உடல் உள்ளுறுப்புக்கள் மற்றும் முத்திரையிடப்பட்ட ஆடைகள் இருந்த மரப்பெட்டியை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.18 17:39:20 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.